# வருமான வரித்துறை

வழங்கும்

# மோட்டு பத்லூ

மற்றும்


# பான் கார்டின் கதை




என்னுடைய பெயர் டேக்ஸா, என்னுடைய பெயர் டேக்ஸா,
இந்திய மக்கள் அனைவருக்கும் வணக்கம்.
வருமான வரி பற்றிய எல்லா விவரங்களையும் நான்
மனம் திறந்து சொல்லப் போகிறேன்.
உரிய தருணத்தில் உங்க வரியை செலுத்துங்க
என்னுடனான உங்கள் நட்பை துவக்குங்க





மோட்டு பத்லூ & பான் கார்டின் கதை
கருத்துருவாக்கம் - வருமான வரித்துறை
இயக்குநரகம் (PR, P&P), மயூர் பவன், புது தில்லி.
பேங்க் ஆப் பார்புரி நகர்
தூதரகம்
அப்பப்ப்பா.. ரொம்ப விசித்திரமா இருக்கே... எந்த வங்கியும் என் வங்கிக் கணக்கை துவக்க தயாராக இல்லையே....
நீ வேற.. எனக்கு விசா கூட கிடைக்க மாட்டேங்குதுப்பா. ப்ப்ப்...
எல்லோரும் என் பான் கார்டை கேட்கிறாங்க.
அப்புறம் என்னுடைய மூன்று வருடத்தின் வருமான வரிப்படிவத்தையும் கேட்கிறாங்க (ITR)




நான் போஸ்ட் கார்டு, ரேஷன் கார்டு பற்றியெல்லாம் கேள்விப் பட்டிருக்கேன், பத்லூ.. ஆனால், இது என்னப்பா பான் கார்டு?
எனக்கு எப்படிப்பா தெரியும்? நானே என் சிங்கப்பூர் கனவு அம்போன்னு போச்சேன்னு சோகமா மனசு ஒடிஞ்சி கிடக்கிறேன். ப்ப்ப்..






உங்கள் கேள்விகள் எல்லாவற்றுக்கும் டேக்ஸாவிடம் பதில் உள்ளது
டேக்ஸா, நீ வந்தது ரொம்பே மகிழ்ச்சியா இருக்குப்பா..
எங்க பிரச்சனைகளை உன்னால தீர்க்க முடிஞ்சா, அப்போதான் நாங்க உன்னை அசல் செயற்கை நுண்ணறிவாளரா, அதாவது ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜன்ஸா ஒப்புக்கொள்வோம்.


அப்படியென்றால் நம்ம மோட்டு பத்லூ நிஜமாவே வருத்தமாக இருக்காங்க போல.. அதனால், நான் அவர்களுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும்....
சொல்லுங்க, உங்க பிரச்சனை தான் என்ன...
இதென்ன பான் கார்டு? வங்கிப் பணியாளர்கள் அது தான் வேண்டும் என்று கேட்கிறாங்க.


பான் -என்றால் நிரந்தர கணக்கு எண் என்று அர்த்தம். இதுதான் உங்களுடைய உண்மையான அடையாளம்.
ஆனால், நான் மோட்டு, இதோ இவன் பத்லூ.. இது எங்களுடைய உண்மையான அடையாளம் இல்லையா டேக்ஸா?


பாருங்க.. இந்த உலகத்தில் மோட்டு என்ற பெயரில் பலர் இருப்பார்கள், சரியா... அப்போ, உங்களை நாங்கள் எப்படி அடையாளம் காண முடியும்?
அட! ஆமாம், நான் இதை உணரவேயில்லையே... என்னோட தனித்துவமான அடையாளம் என்ன டேக்ஸா?
அது தான் உங்களுடைய பான், அது ஒவ்வொருவருக்கும் தனித்துவமானதாக இருக்கும். வருமான வரித்துறை மற்றும் உங்களுடைய வங்கி இந்த பான் -ஐ உங்களுடைய எல்லா வருமானம் மற்றும் வரி சம்பந்தமான விஷயங்களுக்கு உபயோகப்படுத்துவார்கள்
ஆனால், அதன் பலன்கள் தான் என்ன?
நமக்கு ஏன் பான் கார்டு தேவை? அது நமக்கு எப்படி பயனுள்ளதாக இருக்கிறது?


பான் கார்டு இல்லாமல் உங்களால் புதிய வங்கிக் கணக்கை தொடங்க முடியாது. உங்களால் எந்த சொத்தையும், வீட்டையும், ஏன் காரை கூட விற்கவோ அல்லது வாங்கவோ முடியாது
ஓ... அதனால்தான் வங்கி ஊழியர்கள் எனது வங்கிக் கணக்கைத் துவக்கவில்லையா?
நிச்சயமாக! உங்கள் வருமான வரிப் படிவத்தை தாக்கல் செய்யும் போது இந்த எண் தான் உங்கள் அடையாளமாக செயல்படுகிறது. நீங்கள் எப்போதெல்லாம் ஏதேனும் சொத்து, வாகனம், நகைகள் போன்றவற்றை வாங்கும்போதும் அல்லது ஏதேனும் வங்கிப் பரிவர்த்தனை செய்யும்போதும், இந்த எண் மூலம் உங்கள் தகவல்கள் வருமான வரித் துறையுடன் பகிரப்படும். ஏனெனில், இந்த எண் உங்களுடையது, உங்களுடையது மட்டுமே.
ஆதார் கார்டும் இதைப்போல தான் உள்ளது. அப்புறம் இந்த இரண்டுக்கும் அப்படி என்ன தான் வித்தியாசம்?




ஆதார் என்பது உங்களது தனிப்பட்ட அடையாள எண், மேலும் பான் என்பது வருமான வரித்துறையின் குறிப்பிட்ட பயன்பாட்டுக்கானது. இரண்டுமே கட்டாயமானது மற்றும் அதனதன் வழியில் முக்கியமானது.
அது சரி... ஆனால், இந்த வருமான வரிப்படிவம் என்றால் என்ன?
இதன் காரணமாக தான் எனது விசாவும் வழங்கப்படவில்லை
உப்ப்ப்!!
ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் சம்பாதிக்கும் வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டும்.
ஹ்ம்ம், அப்படியானால் நாங்கள் ஏன் வருமான வரிப்படிவத்தை தாக்கல் செய்ய வேண்டும்?
இப்போது தொழில்நுட்பம் ஒரு படி முன்னேறியுள்ளது. உங்கள் பான் கார்டை நீங்கள் வங்கி பயன்பாட்டிற்கோ, ஷாப்பிங் செய்யவோ, சொத்துக்கள் வாங்கவோ அல்லது விற்கவோ உபயோகப்படுத்தும் போதெல்லாம், ஒவ்வொரு விவரமும் வருமான வரித்துறைக்கு நேரடியாகச் செல்கிறது. ஒரு விதத்தில், அவர்கள் உங்கள் எல்லா பரிவர்த்தனைகளையும் கண்காணிக்கிறார்கள்.
ஹ்ம்ம். பிறகு ஏன் நாம் வருமான வரி தாக்கல் செய்ய வேண்டும் ?



என் அன்பான நண்பர்களே, வருமான வரிப்படிவத்தை  தாக்கல் செய்வதன் மூலம் மட்டுமே, உங்கள் வருமானத்திற்கு செலுத்த வேண்டிய வரியின் சரியான தொகையை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.
அப்போ வங்கி கழிக்கும் TDS என்பது என்ன?
உங்கள் வருமான வரிப்படிவத்தில், எந்த குழப்பமும் இல்லாமல் அனைத்தும் தெள்ள தெளிவாக இருக்கும், மேலும் இது உங்கள் வரிக்குரிய வருமானம் மற்றும் செலுத்தப்பட்ட வரிகளைக் காட்டும்.
அதாவது, வருமான வரிப்படிவத்தை உரிய நேரத்தில் தாக்கல் செய்தால் மன அழுத்தமின்றி இருக்கலாம்.
இதைத் தவிர வேறு எதையும் கவனிக்க வேண்டியதில்லையா?


இல்லை மோட்டு பத்லூ, அபராதத்தை தவிர்க்க உங்கள் வரிகளை சரியான நேரத்தில் நீங்கள் செலுத்த வேண்டும்.
அதாவது, ஒவ்வொரு வருடமும் நாம் வருமான வரிப்படிவத்தை தாக்கல் செய்ய வேண்டுமா?
ஆஹா! அருமை! இப்பொழுது தான், நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள்.
அதாவது, வருமான வரித்துறைக்கு நமது சரியான நிதி விவரங்களைத் தெரியப்படுத்த, நம்மிடம் பான் கார்டு இருக்க வேண்டும்.
மேலும் வருமான வரியை கட்டாயமாக செலுத்த வேண்டும், அதனால் தேசத்திற்கான நமது கடமையை நாம் நிறைவேற்றுவோம்.
அன்புள்ள டேக்ஸா, இப்போது எங்கள் பான் கார்டுகளைப் பெற உதவுங்கள், அப்போது தான் நாங்கள் எங்கள் வருமான வரியைச் செலுத்த முடியும்.



ரொம்ப நல்லது! இப்போது டேக்ஸாவின் மாயாஜாலத்தைக் காண தயாராகுங்கள்.
"வருவாய் என்பது ஆட்சியின் ஆதாரம்"





இதோ இங்கே! உங்கள் பான் கார்டுகள். இதன் மூலம், நீங்கள் இப்போது உங்கள் வங்கிக் கணக்கை எளிதாகத் துவக்கலாம்.
आयकर विभाग
INCOME TAX DEPARTMENT
भारत सरकार
GOVT. OF INDIA
PATLU
15/01/XXXX
PPNCP84XXX
आयकर विभाग
INCOME TAX DEPARTMENT
भारत सरकार
GOVT. OF INDIA
MOTU
27/05/XXXX
MMNCM55XXX
நான் எனது வருமான வரிப்படிவத்தை தாக்கல் செய்து எனது சிங்கப்பூர் விசாவைப் பெற முடியும்.


மிக்க நன்றி டேக்ஸா. பான் கார்டு மற்றும் வருமான வரி பற்றிய உங்கள் வழிகாட்டுதலின் மூலம், நீங்கள் எங்கள் வாழ்க்கையை நிச்சயமாக எளிதாக்கியுள்ளீர்கள்.
ஹேய்!!! டாக்ஸா அற்புதம்!!! வாருங்கள், வருமான வரித் துறையைப் பற்றி அனைவருக்கும் எடுத்துரைத்து, அனைவரின் அறிவையும் அதிகரிப்போம்.
டாக்ஸா, நீங்களும் எங்களுடன் சிங்கப்பூருக்கு வர வேண்டும், அங்கு நாம் வேடிக்கையாக பொழுதை கழிக்கலாம், ஹா ஹா ஹா....
முற்றும்.

# புதிர்

மோட்டுவிற்கு பத்லூவிற்கு வழி கண்டுபிடிக்க உதவி
செய்யுங்கள்





# படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்







# இதர பதிப்புகள்

இந்த கதையின் மூலமாக, வருமான வரியை நேர்மையாக செலுத்துவது நமது தேசத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பதை கற்றுக் கொள்வோம்



Azadi Ka Amrit Mahotsav

